குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.182/2013

அ.சா.7

2024–ம் ஆண்டு டிசம்பர் 11–ம் தேதி புதன்கிழமை அரசு தரப்பு சாட்சி 07–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பழனிசாமி | ஜாதி | |
| தந்தை பெயர் | பெருமாள் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.54 மணி,

Accused A2/Subramani present. A1.Ramasamy died and charge abated. Advocate Mr.Siddhartha Shankar present for accused. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை :**

**1.** நான் பாரக்கல்லூரில் குடியிருந்து கொண்டு ஐஸ் வியாபாரம் செய்து வருகிறேன். சுமார் 13 வருடங்களுக்கு முன்பு எங்கள் வீட்டருகே குடியிருக்கும் வெங்கடேஷ் என்பவர் அவருக்கு சொந்தமான லாரியை எங்கள் ஊரில் உள்ள மாரியம்மன் கோவில் அருகே நிறுத்தி இருந்தார். அந்த லாரி திருடு போய்விட்டது. அதன்பின்பு அந்த லாரி ஆரூர்பட்டி ஏரியில் நின்று இருப்பதாக சொல்லி காவல் நிலையத்திற்கு எடுத்து வந்தார்கள். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். **(அந்த 1 வது கையெழுத்து அ.சா.ஆ–5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** மேற்படி கையெழுத்து காவல் நிலையத்தில் வைத்து போட்டேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**( அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

2. போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் கடந்த 17.06.2013 ம் தேதி 16.00 மணியளவில் ஆரூபட்டி ஏரியில் கேட்பாறற்று நின்று கொண்டு இருந்த TN 30 U 9419 என்ற அசோக் லைலாண்ட் லாரியை போலீசார் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றிய போது நான் சாட்சியாக உடனிருந்து கையெழுத்து போட்டு தற்போது காவல் நிலையத்தில் வைத்து போட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

இல்லை.

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 01.00 மணி,

ஒம்/−ச.ஷர்மிளா,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.